# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | பாலகிருஷ்ணன் | மதம் | .. | இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. | கோவிந்த செட்டியார் | தொழில் | .. | எல்.ஐ.சி. முகவர் |
| வயது | .. | 80 | ஜாதி | .. | ஆயிர வைசியர் நகரம் |
| கிராமம் | .. | சேலம் | நாள் | .. | 04.03.2021 |
| மாவட்டம் | .. | சேலம் மாவட்டம் | | | |

1872 ஆம் வருடத்திய சட்டம் 1 ல் குறிப்பிட்ட விதிமுறையின்படி வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சியான திரு. பாலகிருஷ்ணன் என்பவர், இந்நீதிமன்றத்தில் உதவியாளர் கிரேடு 3 ஆக பணிபுரியும் திருமதி. கோகிலா என்பவரால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

முதல் விசாரணை .. 04.03.2021

அசல் வழக்கு எண் .. 313/2015

வா.சா.1 - பாலகிருஷ்ணன் - சாட்சிய பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டது.

1) 05.11.1932 – இ.ஏ.நெ. 1308/1932 இன் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் சங்ககிரியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு, உண்மை நகல். வா.சா.ஆ.1

மேற்கண்ட ஆவணமானது நோட்டரி வழக்கறிஞரால் சான்றொப்பம் இட்டதாக கூறப்பட்டு தாக்கல் செய்யப்படுகிறது. ஆனால் நோட்டரி வழக்கறிஞரின் முத்திரையானது தெளிவாக இல்லாமல் இருப்பதால், இந்த ஆவணத்தை குறியீடு செய்ய இயலாது என்ற கற்றறிந்த 1 முதல் 4 பிரதிவாதிகளின் வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது.

2) 04.03.1949 - எங்களது குடும்ப உறுப்பினர்களுக்கு இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரம், பதிவு நகல். வா.சா.ஆ.2.

3) 27.01.1989 – அசல் வழக்கு எண்.159/1988 மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் சங்ககிரியில் தாவா பிராதின் மாதிரி வரைபடம், சான்றிட்ட நகல், வா.சா.ஆ.3.

4) 10.01.2015 – நான் 2, 3 பிரதிவாதிகளுக்கு எனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய சட்ட அறிவிப்பு, அலுவலக நகல், வா.சா.ஆ.4.

5) 12.01.2015 – 2 ஆம் பிரதிவாதியின் அஞ்சல் ஒப்புதல் அட்டை, அசல், வா.சா.ஆ.5.

6) 12.01.2015 – 3 ஆம் பிரதிவாதியின் அஞ்சல் ஒப்புதல் அட்டை, அசல், வா.சா.ஆ.6.

7) எனது தகப்பனார் பெயரில் உள்ள வீட்டுவரி ரசீது (7 எண்ணிக்கை), அசல், வா.சா.ஆ.7.

8) எனது தகப்பனார் பெயரில் உள்ள மின்கட்டண ரசீது, அசல், வா.சா.ஆ.8.

9) தாவா சொத்திற்கு உண்டான புகைப்படங்கள் (7 எண்ணிக்கை), வா.சா.ஆ.9.

10) தாவா சொத்திற்கு உண்டான புகைப்படங்களுக்குரிய குறுந்தகடு, வா.சா.ஆ.10.

11) தாவா சொத்திற்குண்டான மாதிரி வரைபடம், அசல், வா.சா.ஆ.11.

12) வாதிகளின் வம்சாவழி பட்டியல், அசல், வா.சா.ஆ.12.

வேண்டுகோளின் பேரில் முதல் விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம் / பாலகிருஷ்ணன்

ஒப்பம் / திருமதி. மு.பாக்கியம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.